கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம்
மறை வளர ஒன்றிணைவோம்

# தாய்



கத்தோலிக்க சஞ்சிகை - ஆரம்பம் 1997

2024

வைகாசி – ஆடி தாய்–27 சேய்–165



## இரத்தினபுரி மறைமாவட்டத்திற்கு புதிய ஆயர் மேதகு. வைமன் குரூஸ் ஆண்டகை

வெளியீடு – கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம். தொ.பே (0094) 777 289960 விலை–60/-


Nixon Miralee
Quality is Everyone's Responsibility
Nixon Miralee
NM

# தாய் THAAI
## எமது எண்ணம்

May - July 2024
P.O. Box: 1233, Colombo
Mobile: 077 7289960
e.mail:anandapulle@yahoo.com
anandapulle@hotmail.com
www.colombostjosephvazmandram.lk


குடும்பம் என்பது ஒரு குட்டித் திருச்சபையாகும். குடும்பம்தான் எமது விசுவாசத்தின் விளை நிலமாகும்.

ஒரு குழந்தை திருமுழுக்கு பெறும்போது பெற்றோரும், ஞானப்பெற்றோரும் அக்குழந்தையை விசுவாசத்தில் வளர்த்தெடுப்பதாக உறுதி அளிக்கின்றார்கள். இவ்வாறாக ஒரு குழந்தையானது தன்னுடைய குடும்பத்தில் இருந்து பலவிதமான விசுவாச செயற்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் கற்றுக் கொள்கின்றது. ஒரு குழந்தைக்கு பெற்றோர் பிறந்த நாள் தொட்டு கொடுக்கின்ற விசுவாசம் சம்பந்தமான பயிற்சிகள் அக்குழந்தை ஒரு நாள் முதிர்ச்சி அடைந்த நிலையில் உறுதிப்பூசுதல் என்னும் அருள் அடையாளத்தை பெறும்போது தமது விசுவாசத்தை தானாகவே உணர்ந்து அறிக்கையிடக் கூடியதாக இருக்கிறது.

எனவே ஒரு குழந்தையின் விசுவாச வாழ்க்கைக்கு குடும்பத்தில் உள்ளவர்களின், விசேட விதமாக பெற்றோரின் பங்களிப்பும், ஒத்துழைப்பும் இன்றியமையாதது. இத் தோரணையில் சிந்திக்கும்போது, பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளின் விசுவாச வாழ்விலே எவ்வளவு தூரம் அக்கறை காட்டுகின்றார்கள்? பெற்றோர்கள் குழந்தைகளின் ஆன்மீக காரியங்களுக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் அளிக்கிறார்கள்? குடும்பமாக சேர்ந்து குடும்ப செபமாலை சொல்கின்றார்களா? பிள்ளைகள் ஞாயிறு திருப்பலியில் பங்குபெறுவதையும் மறைக்கல்வி வகுப்புகளுக்கு செல்வதையும் ஊக்குக்குவிக்கின்றார்களா? பிள்ளைகள் ஞானத்திலும், பக்தியிலும் வளர எடுக்கும் முயற்ச்சிகள் எவை?

பிள்ளைகளுக்கு இறையரசின் விழுமியங்களை எவ்வளவு தூரம் கற்பித்து கொடுக்கிறார்கள்? பிள்ளைகளுக்கு திருவிவிலியம் வாசிக்க பழக்கி கொடுக்கின்றார்களா? விளையாட்டு, கல்வி, பொழுதுபோக்குக்கு கொடுக்கின்ற நேரம், காலம், செலவு ஆகியவற்றை கருத்தில் கொள்ளும்போது ஆன்மீகத்துக்கு கொடுக்கும் நேரம், காலம் போதுமானதா? சிந்திப்போம்.......

அத்தோடு இரத்தினபுரி மறைமாவட்டத்தை புதிதாக பொறுப்பெடுத்திருக்கும் மேதகு. வயமன் குரூஸ் ஆண்டகை அவர்களுக்கு எமது வாழ்த்துக்களை கூறுவதோடு அவருடைய பணி சிறக்க இறைவனை பிராத்திக்கின்றோம்.


## தாய் நிர்வாகம்

**பிரதம ஆசிரியர்**
அருட்பணி. ஆனந்தன் பொ்னாண்டோபுள்ளே
: 0777 289960

**ஆசிரியர்**
அருட்பணி. ஒனாசியஸ் பெர்னாண்டோ
: 0770 090005

**சஞ்சிகை நிர்வாகம்**
திருமதி. டயனா ரமேஸ் - : 0775 594399
JVM சிரேஷ்ட பெண்கள் குழு

**சஞ்சிகை நிர்வாக ஒருங்கிணைப்பாளர்**
திரு. எனஸ்டன் பெர்னாண்டோ - : 0774 985940
: enestons@gmail.com

**துணை ஆசிரியர்கள்**
திருமதி. சுமதி கோமஸ் - : 0773 672113
திரு. ஜெயக்குமார் பெர்னாண்டோ - : 0777 781275

**கணனி வடிவமைப்பு**
JRCA Digital Graphics (PVT) LTD
(Mr. Ferdinand Devota)

**இணையத்தளம்**
www.colombostjosephvazmandram.lk

# நற்கருணையில் நம் வாழ்வு அமையட்டும்



இயேசுவே ஆண்டவர் என்று நாம் உச்சரிக்கும் போதெல்லாம் நாம் எமது நம்பிக்கையை வெளிப்படுத்துகிறோம். திருப்பலியில் பங்கேற்கும் போதெல்லாம் நற்கருனை வாழ்வின் மகிமையை வெளிப்படுத்துகின்றோம். இருப்பினும் சில வேளைகளில் அவ்வுச்சரிப்பும் செயலும் வெற்று வார்த்தையாக பொருளற்றதாக மனிதர்களில் இருந்துவிடுகிறது. ஆண்டவர் இயேசு தம்மோடு இருக்கவும் பணியாற்றுவதற்காகவும் பன்னிரண்டு சீடர்களை தெரிவு செய்தார். அவர் இச்சீடர்களுக்கு தம்மைப் பற்றியும் தம் பணி பற்றியும் இறைவாக்கினர்களும் திருச்சட்டமும் கூறியவற்றை சொல்லிலும் செயலிலும் காட்டினார். இறையரசைப்பற்றியும் துன்பங்கள் வழி வாழ்வைப் பற்றியும் கற்பித்தார். தாமே முன்மொழியப்பட்ட மெசியா என்பதை பல்வேறு புதுமைகளாலும் அடையாளங்களாலும் நிகழ்த்திக் காட்டினார். இருப்பினும் சீடர்கள் இயேசுவின் போதனையை கேட்டும் புதுமைகளை பார்த்து அனுபவித்தும் இயேசு யார் என்பதை முற்றாக புரிந்துகொள்ள முடியவில்லை.

சீடர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் சாதாரண சாமானிய மக்களாக இருந்தார்கள். மீன்பிடி மற்றும் சாதாரண தொழில் செய்பவர்களாக இருந்தார்கள். உரோமைப் பேரரசின் ஆதிக்கம், அடிமைத்தனம் ஒட்டு மொத்த யூத சமூகத்தையும் பாதித்திருந்த நிலையில் தமக்கான விடுதலை வாழ்வு, சுதந்திர தேசம் என்பதில் ஆர்வமாய் இருந்தார்கள். இவ்வெதிர்பார்ப்புக்கள் நிறைந்த சூழலில் இயேசு ஆண்டவரின் போதனைகள் செயற்பாடுகள் எல்லாம் இவர்களுக்கு பிடித்திருந்தன. நிஜ வாழ்க்கையில் இயேசு சுட்டிக்காட்டிய விடயங்கள் அதிகார வர்க்கத்திற்கு கசப்பாகவும், சாதாரண ஏழை எளிய மக்களுக்கு புத்துணர்வாகவும் அமைந்தது. இவர்கள் இயேசுவை வெறும் யூதன் என்ற கண்ணூடாகவே பார்த்தனர். இவ்வகையான பார்வை இயேசுவின் பாடுகள் பற்றிய புரிதலை கடினமாக்கியது. ஆனால் அவர்கள் விரும்பாததை எதிர்கொண்டார்கள். இயேசு எதிர்வு கூறிய சிலுவைச் சாவை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இயேசு சிலுவையில் கொல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்ட பின் நம்பிக்கையிழந்து போனார்கள். தம் எதிர்பார்ப்புக்கள் எல்லாம் வீணாகி உடைந்து சிதறிப்போனதை உணர்ந்தார்கள். செய்வதறியாது இனி என்ன பழைய வாழ்க்கைதான் என்று திரும்பும் நிலைதான் அவர்கள் கையில் மிகுதியாக இருந்தது.

இருந்தாலும் குழப்பநிலைகளை எதிர்கொள்கிறார்கள். புதிய செய்தி புதிரான செய்தி இதுவரைக்கும் மனித வரலாற்றில் இடம்பெறாத செய்தி, வியப்பான செய்தி, நம்பமுடியாத செய்தி அதுதான் இயேசு உயிர்த்துவிட்டார் என்ற உண்மை. மீட்பு வரலாற்றில் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு மிக முக்கியமானது. ஏனென்றால் இயேசுவின் உயிர்ப்பில்தான் கிறிஸ்தவ நம்பிக்கை, நற்கருணை வாழ்வு கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இயேசுவின் உயிர்ப்பின் அனுபவம், நற்கருணையின் அனுபவமாக அமைகிறது. இது உண்மையான அனுபவம். இயேசு பாடுகள் படுவதற்கு முன் இறுதி இராவுணவின்போது அப்பத்தை எடுத்து **“இது என் உடல்”** என்றும் இரச கிண்ணத்தை எடுத்து **“இது உங்களுக்காக சிந்தப்படும் என் இரத்தம்”** என்றும் கூறி தம்மையே திரு உடல், இரத்தமாக தந்தார். இதை அவரது உயிர்ப்பில் அனுபவிக்கும்போது நம் வாழ்வே மாறிப்போகிறது. உயிர்த்த கிறிஸ்துவிற்கு எம்மை அர்ப்பணிக்க தூண்டுகிறது. இயேசுவின் மரணம் சீடர்களிடத்தில் நம்பிக்கையீனத்தையும் சாதாரண வாழ்வுக்கான திரும்புகையையும் ஏற்படுத்துகின்றது. எம்மாவு சென்ற சீடர்களின் உரையாடலில் இது தெளிவாக தெரிகிறது. அவர்களது உரையாடல் இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பைப்பற்றியதாக இருந்தாலும் அவர்களது எதிர்பார்ப்புக்கள் எல்லாம் அடியோடு தகர்ந்து போய்விட்டது என்பதை கோடிட்டு காட்டுவதாக அமைகின்றது. அதாவது கிளேயோப்பாவுடனும் மற்றைய சீடருடனான உரையாடலில் அவர் அவர்களை நோக்கி, ”வழிநெடுகிலும் நீங்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டிருப்பது என்ன?” என்று கேட்டார். அவர்கள் முகவாட்டத்தோடு நின்றார்கள். அவர்களுள் கிளயோப்பா என்னும் பெயருடைய ஒருவர் அவரிடம் மறுமொழியாக, ”எருசலேமில் தங்கியிருப்பவர்களுள் உமக்குமட்டும்தான் இந்நாள்களில் நிகழ்ந்தவை தெரியாதோ!”என்றார். அதற்கு அவர் அவர்களிடம், ”என்ன நிகழ்ந்தது?” என்று கேட்டார். அவர்கள் அவரிடம், ”நாசரேத்து இயேசுவைப் பற்றியேதான் பேசுகின்றோம். அவர் கடவுளுக்கும் மக்கள் எல்லாருக்கும் முன்பாகச் சொல்லிலும், செயலிலும் வல்ல இறைவாக்கினராகத் திகழ்ந்தார். அவர் இஸ்ராயேலை மீட்கப் போகிறார் என்று நாங்கள் எதிர்பார்த்து இருந்தோம். ஆனால் தலைமைக் குருக்களும் ஆட்சியாளர்களும் அவருக்கு மரண தண்டனை விதித்துச் சிலுவையில் அறைந்தார்கள். இவையெல்லாம் நிகழ்ந்து இன்றோடு மூன்று நாள்கள் ஆகின்றன.(லூக் 24.17-21)

தொடரும்...

அருட்பணி. A.V.அல்பிரட் O.M.I.

“நான்தான் உம்மிடம் திருமுழுக்குப் பெற வேண்டியவன் நீரா என்னிடம் வருகிறீர்?”

# மரியாள் முதன் முதல் இயேசுவை உள்ளத்திலா, உடலிலா கருத்தரித்தார்?

**“மரியா”** எனும் நாமம் கபிரியேல் தூதரால் மங்கள வார்த்தையின்போது அறிமுகம் செய்யப்படுகிறது. மரியா எனும் சொல்லிற்கு அழகு எனும் அர்த்தம் உண்டு. இது தவிர மரியா எனும் சொல் மரிக்காதவர், அதாவது ஆன்மாவோடும், உடலோடும் பரலோகம் சென்றவர் எனும் அர்த்தமும் தருகின்றது. அன்னை மரியாவுக்கு இறைவன் கொடுத்த வரங்களிலே கன்னித்தாய், கன்னித்தன்மை எனும் மாபெரும் கொடையும் அடங்குகின்றது. மரியா தன் உடல், உள்ளம், ஆன்மா அனைத்தையும் முழுமையாக இறைவனுக்கு அர்ப்பணிப்பதன் அடையாளமாகவே **“இதோ ஆண்டவரின் அடிமை”** எனக் கூறி தன்னை முற்றும் முழுதும் கையளித்தார்.

அன்னை மரியாவிற்கு கபிரியேல் தேவதூதரின் வாழ்த்து வெறும் வார்த்தையாக சிந்தனையில் மாத்திரம் நிறைந்து அது வடிவம், உருவம், அர்த்தம் பெறாத ஒன்றாக மாறியிருக்கலாம். யூத சமூக அமைப்பும் பயங்கரமாகவே இருந்தது. ஆண் துணையின்றிக் கருத்தரிப்பதை நினைத்துப் பார்க்கக் கூட முடியாது. தனக்கிருந்த சந்தேகத்தை **“இது எங்கனம் நிகழும் நான் கன்னியாயிற்றே”** எனும் கேள்வி வழியாக தீர்த்துக் கொண்டார். சிந்தனையில் அவ்வாழ்த்துரைக்கு அர்த்தம், அனுபவம், வரவேற்புக் கொடுத்தார். உள்ளத்திலும், ஆன்மாவிலும் அதைப்பற்றித் தியானம் செய்யவும் அவ்வார்த்தைக்கு ஆன்மாவிலே இடம் கொடுக்கவும் மரியாக முன்வந்தார். ஆன்மாவில் இயேசு முதலில் கருத்தரிக்க, தூய ஆவியாருக்குத் தனது உடலில் ஏற்றதோர் இடத்தை அமைத்துக் கொடுத்தார். தன் ஆன்மாவில் இடம் கொடுத்து, இயேசுவை ஆன்மீக ரீதியில் கருத்தரித்ததன் பின் வார்த்தை மனுவுருவானார் என நாம் விசுவசித்து ஏற்றுக்கொள்ளும் வார்த்தையான இயேசுவிற்கு ஊனும், உதிரமும் கொடுத்தார். முதலில் ஆதாம் தன் மனைவி ஏவாளை கண்டதும், இவளே என் எலும்புகளின் எலும்பும் சதைகளின் சதையுமானவள் என காதல் பாட்டுப்பாடி தன்னிடமிருந்து எடுக்கப்பட்டதால் மனுஷி என தன்னவளாக ஏற்றுக் கொண்டான்.



அதற்கேற்றாற்போல் இரண்டாம் ஏவாள் மரியாவிடம் கருத்தரித்து மனுவுரு எடுத்த இரண்டாம் ஆதாம் இயேசுவிற்குத் தன் எலும்பையும், சதையையும், உதிரத்தையும் மரியா கொடுத்தார். எனவே மரியா இயேசுவை எங்கே உடலிலா? உள்ளத்திலா? கருத்தரித்தார் என வினவும் போது, முதன் முதல் இயேசுவை சிந்தையில் ஏற்று ஆன்மாவில் சுமந்து, தியானித்து உடலில் கருவுற்றார் என்பதே நம் விசுவாச உண்மையாக இருக்கிறது.
**“கன்னி நம்பினார், விசுவாசித்துக் கருவுற்றார். கிறிஸ்துவை உடலில் தரிக்குமுன் உள்ளத்தில் கருத்தரித்தார்”** என புனித அகுஸ்தினார் உரைக்கிறார்.

நாம் மேகத்தைப் போற்றுவது அது கொடுக்கும் மழைக்காக;
மரத்தைப் போற்றுவது அது கொடுக்கும் கனிக்காக;
பசுவைப் போற்றுவது அது கொடுக்கும் பாலுக்காக;
தாயைப் போற்றுவது அவர் ஈன்றெடுத்த சேய்க்காக;
நாம் மரியாவை போற்றுவது அவர் ஈன்றெடுத்த உலக மீட்பராம் இயேசுவிற்காக.

**“கன்னிப் பெண் கருத்தாங்கி ஒரு மகனைப் பெறுவார்”** என்ற ஏசாயாவின் இறைவாக்கு நிறைவேற அன்னை மரியா தன்னையே முற்றும் முழுதும் விட்டுக் கொடுத்தார். நாமும் அனுதினம் இறைவார்த்தையிலும், அருட்சாதனங்களிலும் விஷேடமாக நற்கருணையிலும், அயலவரிலும் பிரசன்னமாயிருக்கும் இயேசுவை இனங்கண்டு கொண்டு நம்பி ஏற்றுக்கொள்ளவும், சிந்தையில் ஏற்று, ஆன்மாவில் அமர்த்தி தியானித்து ஆன்மாவிலும் உடலிலும் அந்த இயேசுவைக் கருத்தரிப்போம். இயேசுவிற்கு எம் வாழ்வால், எம் வாழ்வில் ஊன், உதிரம் கொடுப்போம்..

**ஆக்கம் : இ. மரியசெல்வன் ( ஓய்வுநிலை நிரந்தர மறைவாழ்வு பணியாளர், மன்னார்.)**
**மீள் ஆக்கம் : அருட்பணி ம. பிராங்டஃவ் – திருவுளசபை**

# அகில திரு அவையின் கூட்டொருங்கியக்கமும் இலங்கை திரு அவையின் சவால்களும்.

கடந்த இதழில் கூட்டொருங்கியக்கத்தின் விடயங்களை 2ம் வத்திக்கான் சங்கத்தோடு இணைத்துப் பேசியிருந்தேன். இவ்விதழில் அகில திரு அவையை சுட்டிக்காட்டும் கூட்டொருங்கியக்க அசைவுக்கு எம் முன் இருக்கக்கூடிய சில சவால்களை அலச விழைகின்றேன். கடந்த ஆண்டில் ஆசிய ஆயர்களின் பேரவையின் வெளியீடாக வெளி வந்த “ஆசிய மக்களின் இயேசுவுடனான பயணம்” (People on Asia Journeying with Jesus) எனும் ஏட்டின் இறுதி இதழில் சுட்டிக்காட்டப்படும் “ஆசிய திருஅவைக்கான சவால்கள்” எனும் பகுதியில் 12 விடயங்கள் பேசப்படுகின்றன. இதனை இலங்கையின் திரு அவையின் சூழமைவுகளுடன் ஒப்பிட்டு பார்க்க விழைகின்றேன். இதனை தூய ஆவியின் துணை கொண்டு திறந்த மனதுடன் புரிந்து கொள்ள விழைவோம்.

**01.இறையரசு அறிவிப்பு**

திரு அவையின் பிரதான பணி நற்செய்தியை அனைத்து மக்களுக்கும் அறிவிப்பதாகும். திரு அவையின் இருப்பு நற்செய்தி அறிவிப்பிலேயே தங்கியுள்ளது. இதற்கமைவான நற்செய்திப் பணிகளை தேசிய பிராந்திய மறைமாவட்ட ரீதியில் முன்னெடுப்பது அவசியமாகும். நற்செய்தி அறிவிப்பை வெறும் மறையுரைத்தல், மனமாற்றம் செய்தல், தள திரு அவைகளை உருவாக்குதல் எனும் குறுகிய மனநிலைகளை கடத்துவதில் தங்கியுள்ளது. தூய ஆவியின் துணைகொண்டு இறைமக்களோடு இணைந்து பயணிப்பது அவசியமே. குருத்துவ இயம், துறவற இயம் எனும் நிலைகளை எம்மண்ணில் கடக்க முயல வேண்டும். (We must go beyond clericalism). ஆயர்கள், குருக்கள், துறவிகளின் கரங்களுக்குள் சிக்கி இருக்கும் மறையுரைத்தலை பொது நிலை மக்களிடம் பொறுப்புள்ள பணிக்கான திட்டமிடல்கள் உருவாக்கப்பட வேண்டும்.

**2.சமயங்களுக்கிடையிலான உரையாடல்:**

இலங்கை மண் ஒரு சமய மக்களுக்கு மட்டும் உரியது எனும் அரசியல் நிலையை ஆரோக்கியமாக கடந்து நான்கு மதங்களுக்கும் உரிய உரிமைகளை பேசக்கூடிய சமயங்களுக்கிடையிலான உரையாடல்கள் வழியாக, சிறப்பாக மேல்மட்ட நிலைகளில் இருந்து அடிப்படை தளங்களுக்கு இதனை நகர்த்தும் அவசியம் தேவைப்படுகிறது. மண்டபங்களிலும், குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து வீதிகள், சந்து பொந்துகளுக்கு கடந்து வரவேண்டியுள்ளது. இதனை பொதுநிலை குழுக்கள் முன்னெடுக்க வேண்டியுள்ளது.

**03.கலாச்சாரமும், மொழியும்**

எமது மண்ணில் நடந்து மௌனித்துப்போன உள்நாட்டுப்போரும் அதன் பின்னும் முன்னெடுக்கப்படும் விடயங்களும் ஆரோக்கியமற்ற இன, மொழி, கலாச்சார சிதைவுகளை தோற்றுவிக்கும் செயல்களுக்கே அழைத்துச்செல்கிறது. எமது மண்ணில் இரு மொழி பேசுவோரும் நான்கு சமயப் பின்னணி கொண்டவர்களும், ஐந்து இன கலாச்சாரங்களைக் கொண்டவர்கள் வாழும் இலங்கை மண்ணில் ஒரு இன கலாச்சார, மொழி ஆளுகை கவலை தருவதாகவே உள்ளது. இனங்களுக்கிடையில் மட்டுமல்லாது மதங்களுக்குள்ளும் பிளவுபட்டுள்ளோம். இலட்சக்கணக்கில் கொன்றழிக்கப்பட்ட தமிழ் இனப்படுகொலைக்கு பெரும்பான்மை இன சகோதரத்தினர் என்ன வழியில் ஆறுதல் படுத்தினர், அல்லது இணைந்து பயணித்தனர்? இதற்கான கரித்தாஸின் மனித உரிமை செயலகம் காத்திரமான பணிகளை முன்னெடுப்பது என்பது பற்றியும் சம உரிமைக்காக உழைக்க திட்டமிடுவதும் தவறிய பணிகளை துரிதப்படுத்தும் அவசியமே. எமது தமிழ் பேசும் மலையக மக்கள், முஸ்லீம் இனத்தவர் தெற்கில் நிகழும் சிங்கள மயமாக்கல், சீன ஆதிக்கம் என்றும் விரிந்து செல்லும் சவால்களை வெற்றி கொள்ள முயல்வோம்.

**04.ஏழ்மையும், அபிவிருத்தியும்:**

எமது மண்ணில் ஏழை மக்களே அதிகம் உள்ளனர். ஏழ்மையும் பசியும், வேலைவாய்ப்பின்மையும், போதைவஸ்து பாவனையும், விற்பனையும், கொலைகளும் மலிந்து அரசியல் விளம்பரங்களாலும், ஊழல்களாலும் நிறைந்து வாடும் இலங்கை மண்ணை மீட்டெடுக்க எப்பணிகளை நாம் முன்னெடுக்க போகின்றோம்? அதிகரித்துள்ள துறவற சபைகளும் துறவற குருத்துவ உருவாக்கல்களும் இதற்கான பதிலிறுப்பை எவ்வாறு வழங்கப்போகின்றன? எதிர்மறையான விடயங்களை எதிர்கொள்ள திரு அவையின் திட்டங்கள் தான் என்ன?

தொடரும்...

அருட்பணி பி. லீயோ ஆம்ஸ்ட்ரோங்

# பொருளுள்ள ஞாயிறு திருப்பலி

**(அருட்பணி. எஸ். ஆரோக்கியராஜ் எழுதிய “திருவழிபாடு ஓர் அறிமுகம்” என்ற நூலிலிருந்து சில பகுதிகள்)**



## திருப்பலியில் தொடக்கச் சடங்குகள்

### 6. மூவொரு கடவுள் பெயரால்

பீட வணக்கம் முடிந்ததும், குரு வழிபாட்டுத் “தலைவருக்குரிய” இடத்திலிருந்து, “தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே” என்று மூவொரு கடவுள் பெயரால் திருப்பலியைத் தொடங்குகிறார்.

ஏனெனில், “நாம் வாழ்வதும் இருப்பதும் இயங்குவதும் அவரில்தான்” மற்றும் “அவரின்றி அணுவும் அசையாது” என்பதே இதன் உட்கருத்து.

மேலும் நாம் எதைச் செய்யத் தொடங்கினாலும் அதைக் கடவுள் பெயரால் தொடங்க வேண்டும் என்பதையும் இது உணர்த்துகிறது.

### 7. குருவின் வாழ்த்துரை

திருப்பலிக்கு வந்திருக்கும் மக்களை, மீண்டும் அதே மூவொரு கடவுள் பெயரால் வாழ்த்தி, திருப்பலியில் பங்கேற்க குரு அழைக்கிறார். இது விவிலிய மரபையொட்டி அமைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் உணர வேண்டும்.

✦கபிரியேல் தூதர் கன்னி மரியாவுக்குத் தோன்றிய போது, முதலில் “அருள்மிகப்பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்” (லூக் 1:28) என்று வாழ்த்துரைத்தார்.

✦அதேபோல் உயிர்த்த இயேசு தம் சீடர்களுக்குத் தோன்றிய போது, “உங்களுக்கு அமைதி உரித்தாகுக!” (யோவா 20:19) என்று வாழ்த்துரைத்தார்.

✦புனித பவுலும் தம் மடல்களில் இது போன்றே இறைமக்களை வாழ்த்துகிறார். எடுத்துக்காட்டாக, “நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக!” (1 கொரி 1:3).

### 8. முன்னுரை

வாழ்த்துரையைத் தொடர்ந்து வரும் முன்னுரையில், குருவோஅல்லது இறைமக்களில் ஒருவரோ அன்றைய திருப்பலியின் மையக்கருத்தை அல்லது அன்றைய விழாவின் சிறப்பை எடுத்தியம்பி, திருப்பலியில் மக்கள் தகுந்த மன நிலையோடு பங்கேற்க ஆர்வம் ஊட்டுவார்.

இம்முன்னுரை சுருக்கமாகவும், மக்கள் கொண்டாட்டத்தில் பங்கேற்க உதவுவதாகவும் இருக்க வேண்டும். இது அந்நாளுக்குரிய 2 அல்லது 3 வாசகங்களின் சுருக்கமாகவோ அல்லது திருப்பலியின் தொடக்கத்திலேயே ஆற்றப்படும் மறையுரையாகவோ இருக்கக் கூடாது. மேலும் தகுந்த தயாரிப்பின்றி, நீண்ட நேரத்திற்கு வளவள என்று பேசிக் கொண்டிருப்பதோ அல்லது 2, 3 பக்கங்களுக்கு எழுதி வைத்து வாசிப்பதோ கூடாது. இது மக்களுடைய பொறுமையைச் சோதிப்பதாகவோ, சலிப்படையச் செய்வதாகவோ இருக்கவும் கூடாது. மாறாக, இது சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதி வைக்கப்பட்டு வாசிக்கப்படுவது நல்லது.



### 9. மனத்துயர் வழிபாடு

கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருள்களைக் கொண்டாடுவதையே திருப்பலி என்கிறோம். இதைக் கொண்டாட பாவிகளாகிய நாம் அனைவரும் தகுதியற்றவர்கள் என்பதை உணரச் செய்வதும், நம் பாவங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்புக் கேட்க உதவி புரிவதுமே இம்மனத்துயர் வழிபாட்டின் நோக்கமாகும்.

இதற்காக திருப்பலிப் புத்தகத்தில் தரப்பட்டுள்ள 7 பாடங்களில் ஏதாவது பொருத்தமான ஒன்றைப் பயன்படுத்தி குரு மக்களை ஆன்ம சோதனை செய்யவும், பாவ மன்னிப்புக் கோரவும் அழைப்பார் அல்லது மக்கள் தங்கள் சொந்த வார்த்தைகளிலேயே மன்னிப்புக் கோரவும் அழைக்கப்படலாம்.

இது அற்ப பாவம் செய்தவர்கள் மனத்துயர் அடைந்து, தூய்மையாகி, நற்கருணை உட்கொள்ள வழிவகை செய்கிறது. அதே வேளையில் இது ஒப்புரவு அருள்சாதனத்திற்கு இணையானது அல்ல என்பதை நாம் உணர வேண்டும். அதாவது, மனத்துயர் வழிபாட்டில் நாம் வருந்தி, மன்னிப்புக் கேட்கும் பாவங்களை மீண்டும் ஒப்புரவு அருள்சாதனத்தில் அறிக்கையிட்டு மன்னிப்புப் பெறக் கடமைப்பட்டுள்ளோம்.

தொடரும்......

# மரியன்னையின் தூய இல்லத் திருத்தலம் – லொறேடோ


## ( Sanctuary of Holy House of Loreto ) – தொடர் –

மே மாதங்களில் எம் கத்தோலிக்க இல்லங்களில் செபிக்கப்படுகின்ற மன்றாட்டு மாலையானது “லொறேடோ” ( Litany of Loreto ) என ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்றது. இவ்வத்தியாயத்தில் இப்பெயர்கொண்ட திருத்தலத்தையே ஆராயவுள்ளோம்.

இத்தாலியில் லொறேடோ என்பது புன்னைமரங்களைக் குறிக்கும். பண்டைக்கால உரோமர்கள் புன்னை மரத்தை வெற்றியின் அடையாளமாகக் கொண்டாடினார்கள். புன்னை மரங்கள் ஆங்காங்கே பரவிக் கிடப்பதாலும் நாம் பார்க்கவுள்ள இடத்திற்கு லொறேடோ என்னும் காரணப் பெயர் கிடைத்திருக்கலாம்.

இத்தாலியின் மத்திய பிராந்தியமான லெ மார்கே ( Le Marche) மாநிலத்தின் தலைநகரான அங்கோனா ( Ancona )வில் இருந்து சுமார் ஒரு மணி நேர வாகன ஓட்டத்தில் அமைந்துள்ள சிறு நகரே லொறேடோவாகும். இந்நகரின் சிறப்பம்சத்திற்கு காரணம் இத்தாலியில் (Santa casa)சாந்த காசா என அழைக்கப்படும் மரியன்னை வாழ்ந்த வீடு இந்நகரிற்கு கொண்டுவரப்பட்டதாகும். 1291ம் ஆண்டு சிலுவைப் போர்வீரர்கள் ( Crusaders ) புனித நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.
எனவே திருப்பண்டங்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் 1294ல் மரியன்னை நசரேத்தில் வாழ்ந்த வீடானது கடல் மார்க்கமாக இங்கு கொண்டுவரப்பட்டது.

ஆரம்பத்தில் நகரின் சிறிய குன்றில் மீது வைக்கப்பட்ட இத்தூய இல்லமானது காலப்போக்கில்




பெசிலிக்காவுடன் கூடிய ஓர் யாத்திரை ஸ்தலமாக உருவெடுத்தது. இன்றைக்கு ஏறக்குறைய 40 இலட்சம் திருப்பயணிகள் வருடத்திற்கு வந்துசெல்கின்றார்கள். மரியன்னையின் தூய இல்லம் பற்றி ஆராய முன் அதனைத் தன்னுள் கொண்டுள்ள பெசிலிக்காவின் சிறப்பம்சங்களை சிறிது பார்வையிடுவோம்.











பெசிலிக்காவின் கட்டுமானப் பணிகள் 1469ல் திருத்தந்தை இரண்டாம் சின்னப்பரோடு ஆரம்பமாகி, 1587ல் ஆலய முகப்புடன் நிறைவேறியது. இத்திருத்தலத்தை திருத்தந்தை பிரான்சிஸ் ஒரு பெசிலிக்காவாக பிரகடனப்படுத்தினார். பல்வேறு சிறப்பம்சங்களை இப்பெசிலிக்கா தன்னுள் கொண்டுள்ளது . முதலாவதாக இதன் குவிமாடம் (Dome) ஒன்பது மாதங்களில் கட்டப்பட்டதாகும். (1499 வைகாசி -1500 புரட்டாதி) எண்கோண வடிவிலான வட்டமான மூலைகளை உடைய இக்குவிமாடத்தின் விட்டம் 22அடி ஆகும். இவ்வளவு நீளமான விட்டமுடைய குவிமாடமானது இத்தாலியின் மூன்றாவது பெரிய குவிமாடம் எனப் பெயர் பெறுகின்றது. (முதலாவது உரோமில்உள்ள புனித பேதுரு பெசிலிக்காவின் குவிமாடம். இரண்டாவது புளோரன்ஸிலுள்ள Santa Maria del Fiore ஆலய குவிமாடமாகும்.)

இப்பெசிலிக்காவின் மணிக்கூட்டுக் கோபுரமானது (Bell tower)ஐந்து அடுக்குகளுடைய 75அடி உயரமானது. முதல் இரண்டு அடுக்குகளும் சதுர வடிவிலும், மூன்றாவது எண்கோண வடிவிலும், நான்காவது வட்டவடிவிலும், இறுதி அடுக்கானது Baroque கட்டிடக் கலையைத் தழுவி கட்டப்பட்டுள்ளது.
அதன் மூன்றாவது அடுக்கிலேயே ஆலய மணியானது பொருத்தப்பட்டுள்ளது. Loreta எனப் செல்லப் பெயரிடப்பட்டுள்ள இம்மணியானது 784cm விட்டமும் 7300 kg எடையும் கொண்டது.

(அடுத்த இதழில் தொடரும்...)

**Fr.கிளேரியன்**

# கிறிஸ்துவுக்காக மேற்கொள்ளும் அலைச்சல்

மரியாயின் சேனை இயக்கத்தினால் இப்புனிதமான பணி மேற்கொள்ளப்படுகிறது. இப்பணியை சேனையார் மேற்கொள்வதின் முக்கிய நோக்கம் நம் ஆண்டவர் இயேசு உலகெங்கும் சென்று நற்செய்தியைப் போதியுங்கள் என்று கூறிய வார்த்தைக்கு இணங்க செயல்படுவதாகும். எனவே சேனையார் அனைவரும் தங்கள் பங்குத்தலங்களை விட்டு வெளிமாவட்டங்களுக்குச் சென்று தங்களை ஓரிரு நாள் அர்ப்பணித்து இப் பணியில் ஈடுபடுகிறார்கள். அர்ப்பணிப்பு என்னவென்றால் தங்கள் குடும்பங்களையும் குடும்பக்கடமைகளையும்



விட்டு மற்றைய குடும்பங்களையும் குடும்ப அங்கத்தவர்களையும் தரிசித்து அவர்களின் ஆன்மாக்களை புதுப்பிப்பதே ஆகும்.

இப்பணியின் போது சேனையார் அனைவரும். தங்களை முழுவதுமாக இறைதந்தைக்கும் மரியன்னைக்கும் ஒப்புக்கொடுத்து பரிசுத்த ஆவியானவரின் துணையோடு பணியை மேற்கொள்வார்கள்.

மரியன்னையின் உள்ளம் அன்பினால் எவ்வளவு நிரம்பப்பெற்றதெனில் அன்பே உருவான ஆண்டவரை தன் கருவில் தாங்கி ஈன்றெடுக்க அவர் தகுதியுடையவராக கருதப்பட்டார். மரியன்னையின் மீது ஆழ்ந்த பக்தி கொண்டு அவரை எல்லாவற்றிலும் கண்டுபாலிப்பது தான் சேனைக்கு உயிர்நாடி போன்ற பண்பாகும். ஆகவே அவரிடம் விளங்கிய அன்பு சேனையிடமும் புலனாக வேண்டும். சேனை அன்பினால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். அப்பொழுது தான் மற்றவர்களுக்கு அன்பைப் பரப்புவதற்கு ஒவ்வொரு அங்கத்தவராலும் முடியும்.

இவற்றைக் கருத்தில் கொண்டு இப்பணியை மேற்கொண்டால் இப்பணி மிகவும் சிறப்பானதாக அமையும்.

**அற்புத மாதா கியூரியா**
**அங்கத்தவர்கள், நீர்கொழும்பு.**

## முத்திப்பேறு பெற்ற கார்லோ எக்யூடிஸ்

15 வயது கிரம்பிய இத்தாலிய இளைஞர் ஒருவர் புனிதராகிறார். இங்கிலாந்து லண்டனைச் சேர்ந்த பெற்றோருக்கு 03-05-1991ல் பிறந்தவர் கார்லோ எக்யூடிஸ், வளர்த்ததென்னவோ இத்தாலி மிலானில், இவர் தனது ஏழாவது வயதில் முதல் சற்பிரசாதம் பெறும் வரை இவரது பெற்றோர்கள் எந்த மதத்திலும் பற்று உடையவர்களாக இருக்கவில்லை. ஆனால் இவரோ அடிக்கடி திருப்பலியில் பங்குபற்றுகிறவராகவும், நற்கருணை உட்கொள்பவருமாக இருந்தார். வாரத்திற்கு இரண்டு மூன்று முறையாவது திவ்விய சற்பிரசாதத்திற்கு முன்னால் அமர்ந்து இயேசுவோடு உரையாடிக் கொண்டிருப்பர். திருப்பலியின் முன்னாலோ திருப்பலியின் பின்னாலோ இவர் இதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இவருக்கு 7-8 வயது நடக்கும் போதே திவ்விய சற்பிரசாதத்தைப் பற்றி ஆய்ந்தறிந்து, அதன் சிறப்பு, வல்லமை புதுமைகள், அதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் அனைத்தையும் நவீன தொழில்நுட்பம் மூலம் இணையத்தளம் ஊடாக உலகிற்கு வெளிக்காட்டினார்.



(தொடர்ச்சி 21ம் பக்கம்...)

ஆனால் ஒரு வார்த்தை சொல்லும் என் ஊழியர் நலமடைவார்.

# கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றத்தின் டிவைன் தியானங்கள்

1999ம் ஆண்டு நிறைவுற்று இரண்டாயிரம் ஆண்டுக்கு முழு உலகமும் ஆயத்தமாகிய வண்ணம் இருந்தது. கொழும்பு மறை மாவட்டத்தில் தமிழ் பேசும் கத்தோலிக்கர்கள் அடிப்படை வாதக் குழுக்களின் தொந்தரவின் உச்ச நிலையில் இருந்த காலம் அது. தமிழ் பேசும் கத்தோலிக்கர்கள் பங்குகளில் இருந்தாலும் அவர்களுக்கு பல பங்குகளில் தமிழ் மொழியில் திருப்பலி கிடைக்காத காலம். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள், வடக்கு கிழக்கில் இருந்து கொழும்பு நகருக்கு வருகை தந்து, தங்கள் ஏக்கங்களையும், கவலைகளையும் கடவுளிடம் முறைப்பாடு செய்ய சந்தர்ப்பம் தேடிய காலம்.

அக்காலத்தில், கொழும்பு புதுச்செட்டித்தெரு, புனித வியாகுல மாதா ஆலயம், வியாகுலத்தில் வாடிய பாதிக்கப்பட்ட அனைத்து மக்களையும் கரம் நீட்டி அரவணைத்தது. இச் சூழலில்தான் டிவைன் தியானங்கள் புனித வியாகுல மாத ஆலயத்திலும், கொழும்பு மறை மாவட்டத்தின் தமிழ் பேசும் கத்தோலிக்கர்கள் வாழும் பல பங்குகளிலும் நடைபெறத் தொடங்கியது. திருவாளர் பிரான்கோ கூஞ்ஞே அவர்கள் இதற்கு பெரும் உதவியாக இருந்தார். இந்திய சாலக்குடி டிவைன் தியான இல்லத்தில் இருந்து பல குழுக்கள், அதேபோல் சகோதரர் ஜோர்ஜ் தரகன் போன்ற பொது நிலையினப் போதகர்கள் அழைக்கப்பட்டனர். தவக்காலங்களில் 40 நாள் தியானங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மக்கள் வெள்ளம் தாகத்துடன் வர ஆரம்பித்தனர். காலை ஒரு நிகழ்வு, மாலை ஒரு நிகழ்வு என்று தொடர்ந்தது.

புனித வியாகுல மாதா ஆலயத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த டிவைன் தியானமானது, கொழும்பு புனித ஜோசப் வாஸ் மன்றத்தால் கொழும்பு மறைமாவட்டத்தின் வேறு பங்குகளுக்கும், வேறு மறைமாவட்ட பங்குகளுக்கும் எடுத்து செல்லப்பட்டது. நீர்கொழும்பு கடற்கரைத் தெரு, தோப்பு, வத்தளை, கிராண்பாஸ், புதுக்கடை, மாளிகாவத்தை, பொரள்ளை, இராஜகிரிய, திம்பிரிகஸ்யாய, வெள்ளவத்தை, மோதர, செக்கடித்தெரு, தெமட்டகொடை, மத்துகமை, அவிசாவெள, இரத்தினரி, போன்ற பங்குகளிலும் தலவில, மடு, தேவத்தை போன்ற திருத்தலங்களிலும் இத்தியானங்கள் நடைபெற்றன.

ஆண்டுகள் பல செல்லச் செல்ல இது தங்கி நின்று பங்குகொள்ளும் தியானமாகவும் மாறியது. விஷேடமாக இராகமை தேவத்தை பசிலிக்கா யூபிலி மண்டபம் இதற்கு மிகச்சிறந்த இடமாக மாறியது. கிட்டத்தட்ட 600 பேர் இரவு, பகல் தங்கி நின்று, மூன்று நாட்கள் தியானம் செய்ய மண்டபமும், பசிலிக்காவை சுற்றியுள்ள ஆலய வீடுகளும் இதற்காக பெறப்பட்டன. அதே போல் மடு, தலவில போன்ற திருத்தலங்களிலும் இராகமை வல்பொல புது வாழ்வு தியானஇல்லத்திலும் தங்கி நின்று தியானம் நடத்தப்பட்டது. இளையோர் தியானம், வளர்ந்தோர் தியானம் என வெவ்வேறாகவும் இத் தியானங்கள் நடைபெற்றன. உண்மையில் இத் தியானங்கள் பலருடைய வாழ்வை மாற்றியது. பல இளைஞர்கள் இறைவனை நாட ஆரம்பித்தார்கள்.

இப்போதும் இத்தியானங்கள் ஆண்டு தோறும் நடைபெற்று வருகின்றன. மே மாதத்தில் வரும் வெசாக் விடுமுறை எமக்கு இத்தியானம் ஒழுங்கு செய்யும் நாட்களாக இருந்தன. தொடர்ச்சியாக தங்கி நின்று பங்கெடுக்கும் தியானமானது ஆலயங்களில் நடந்த குண்டு வெடிப்பு காரணமாகவும், கொரோனா போன்ற தொற்று கிருமி காரணமாகவும் நிறுத்தி வைக்கப்பட்டு அது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2017ம் ஆண்டு பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்ஜித் ஆண்டகை கொழும்பு பெரிய சிலுவப்பாதைக்கு வந்தபோது

**"ஒரு மணி நேரம்கூட என்னோடு விழித்திருக்க உங்களுக்கு வலுவில்லையா?"**

அதை உற்சாகப்படுத்தி ஒவ்வொரு ஆண்டும் சிலுவைப் பாதைபோல் மற்றும் ஒரு பிரமாண்டமான நிகழ்ச்சியை தொடங்குமாறு மன்ற ஆன்மீக இயக்குனர் அருட் தந்தை ஆனந்தனிடம் வேண்டுகோள் விடுத்தார். அதன்படி அவ்வாண்டு ஆடி மாதத்தில் ஒரு முழு இரவு திருவிழிப்பு கொட்டாஞ்சேனை புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி சதுக்கத்தில் நடாத்தப்பட்டது. பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்ஜித் ஆண்டகை அவர்களே தலைமை தாங்கினார்கள். அதற்குமுன் இப்படியான திருவிழிப்புக்கள் வைத்திருந்தாலும் இத் திருவிழிப்பு பேராயரின் வேண்டுகோளில் நடைபெற்றது. அது இன்றும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. இத் திருவிழிப்பு தியானங்கள் அதற்கு முன் மருதானை புனித சூசையப்பர் கல்லூரி உள்ளக அரங்கில் முன்னாள் பேராயர் ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை தலைமையில் நடைபெற்றது, மேலும் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்திலும், புனித அன்னம்மாள் பாடசாலை மைதானத்திலும் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பணி மன்றத்தில் தொடர அனைவரின் ஜெபமும் உதவியும் கட்டாயமாக தேவையாகவுள்ளது.

அடுத்த இதழில் மன்றத்தின் மற்றுமொரு பணியைப் பற்றி பார்ப்போம்.

- எஸ்டன் -

"என்னைத் தயக்கம் இன்றி ஏற்றுக்கொள்வோர் பேறு பெற்றோர்" என்றார்.

# SUGUMAR

## RELIGIOUS REPOSITORY





**Wholesale & Retail**
**Dealers in all of Religious Articles**

No. 16, Sri Ramanathan Road, Colombo - 13.
Tel : 0112433197


## 1ம் ஆண்டு நினைவு அஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 04 | 20 |
| 07 | 06 |
| 1981 | 2023 |

# திரு. டிரோன் பெர்ணான்டோ

இறைவா! உம் படைப்புக்கள் எதுவுமே அழிவுறுவதை நீர் விரும்புவதில்லை.
அழியா வாழ்வை நோக்கி வந்திருக்கும் இவ்வான்மாவிற்கு உமது
பேரன்பு நிறைந்த அமைதியும் ஒளியும்
நிறைந்த இடத்தை நீர் அளித்துள்ளமைக்காக உமக்கு நன்றி
செலுத்துகிறோம்.

மனைவி *Anat Diosini*
தந்தை - சகோதரர்கள் மற்றும் குடும்பத்தினர்

## இரத்தினபுரி மறைமாவட்டத்தின் புதிய ஆயர் மேதகு வைமன் குரூஸ் ஆண்டகை அவர்களின் ஆயர் அபிஷேக வைபவம். 01.06.2024



## கொழும்பு 13, கொச்சிக்கடை, புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா. 13.6.2024





மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல் மாறாக, கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்“

மருதமடு அன்னைக்கு
மணிமுடி சூட்டிய
நூற்றாண்டு விழாவானது
பாப்பரசரின் பிரதிநிதியாக
கொழும்பு உயர்
மறைமாவட்டத்தின்
பேராயர்
அதி வணக்கத்திற்குரிய
மல்கம் கர்தினால் ரஞ்ஜித்
ஆண்டகை அவர்களின்
தலைமையில்,
மன்னார் மறைமாவட்ட
ஆயர் மேதகு.
இம்மானுவேல்
பெர்ணான்டோ
ஆண்டகையின்
வழிநடத்தலில்
ஏனைய மறைமாவட்ட
ஆயர்களுடன் இணைந்து
கூட்டுத்திருப்பலி
ஒப்புக்கொடுக்கப்பட்டது.
ஏறத்தாழ இரண்டு
இலட்சத்துக்கும் மேற்பட்ட
விசுவாசிகளுக்கு
மத்தியில் மிக
விமர்சையாக
இவ்விழா
கொண்டாடப்பட்டது.
02.07.2024

( இம் மணிமுடி சூட்டு
வரலாற்றின் விபரம்
அடுத்த இதழில்.......... )















# 31ஆவது நினைவு நாள்

அன்னை மடியில்
29:05:1938

இறைவன் மடியில்
19:04:2024



# திருமதி. மேரி ஹில்டா டி குரூஸ்

மண்ணை விட்டு மறைந்தாலும் எம் மனதில் என்றுமே
மாறாது குடி கொண்டிருக்கும்
எமது பாசமிகு அன்னையின் 31ஆவது நினைவு நாள்
திருப்பலியானது திருகோணமலை அன்புவழிபுரம்
தூய சதாசகாய அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.
இவரது ஆன்மா இறைவனின்
நிழலில் நித்திய இளைப்பாற்றி அடைவதாக.
ஆமென்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
ஓட்டன், ஓட்டி மற்றும் சகோதரிகள்.

# வா நண்பா வாழ்ந்து காட்டுவோம் நம் இயேசுவை



●பெத்லகேம் மாட்டுத் தொழுவத்தின் எளிமைப் புரட்சியை
வா ஆடம்பரம் இல்லாத நம் வாழ்வில் சுமந்து செல்வோம்.
பாலைநிலத்தில் வென்றாரே சாத்தானின் சோதனை
வா இறையாட்சிக்கெதிராய் வரும் சோதனையை வென்று படைப்போம் சாதனை.

●நாசரேத்தூர் செபக்கூடத்தில் இறையாட்சி பணியில் இயேசு கொண்ட தெளிவு போல்
தினம் இறைவார்த்தை வாசித்து இறைத்திட்டம் அறிந்து இலட்சியம் வெல்வோம்.

●கலிலேய கடலோரம் இறையாட்சி பணிக்காய் பலரை அழைத்த இயேசு போல்
வா தேவ அழைத்தலுக்காய் வீறு கொண்ட தியாக சமூகம் அமைப்போம்.

●கானாவூரில் மணமக்கள் குறை தீர்க்க அன்னை மரி சொல் கேட்ட இயேசுவைப் போல்
வா நாமும் எல்லா இனமக்கள் துயர் தீர்க்க அன்னை மரியை துணையாய் கொள்வோம்.

●கப்பர்நகூமில் முடக்குவாதமுற்றோரை இயேசு முன் இறக்கியோர் நம்பிக்கையால்
மலைத்து போன இயேசு போல்
வா வாழ்வின் பாதையைத் தொலைத்தோருக்கு இயேசு தான் உண்மை
மீட்பர் என்ற கதை சொல்வோம்.

●கெனேசேரேத்து ஏரிப்பக்கம் பேய் பிடித்தோரை குணப்படுத்திய இயேசு போல்
வா நம் ஊர் சேரிப்பக்கம் போதைப் பேய் விரட்ட துணிவு கொள்வோம்.

●சமாரியாவில் சமூகப்புரட்சி செய்து, சமாரியப் பெண்ணுக்கு புதுப்பாதை அமைத்த இயேசு போல்
வா தீண்டத்தகாதோர் கரம் பிடித்து இதயத்தோடு பேசி மனித மாண்பைப் பெற போராடுவோம்.

●பெத்சதா குளக்கரையில் பிறவி முடவனுக்காய் நீண்ட இயேசுவின் கரம் போல் வா சமுதாய விளிம்புகளில் கரை சேர தவிப்போரின் குறைபோக்கி
வாழ்வளிப்போம்.

●மலை மீதமர்ந்து
இறையாட்சி மதிப்பீட்டை
புட்டு புட்டு வைத்த இயேசு போல
வா தலை போனாலும் இறையாட்சி கட்டியெழுப்பியே தீரும் உறுதி கொள்வோம்.

●தொழுகைக்கூட தலைவரின் மகளை உயிர் பெறச் செய்த இயேசு போல்
வா மளிகைக்கடையில் விலைபோகும் பொருளில் போன மனித உயிரை மாண்புறச் செய்வோம்.

●பெத்சாய்தாவில் பேதுருவின் மாமியார் காய்ச்சலை குணமாக்கிய இயேசு போல்
கவனிப்பாரற்ற மனித மனங்களிலுள்ள புகைச்சலை நீக்கி மகிழ்விப்போம்.

●எரிக்கோவில் பார்வையற்றோர் மேல் பரிவு கொண்டு பார்வை தந்த இயேசுபோல்
நம் ஊர் தெருக்கோடியில் வாழ்வின் வழி அறியாத பலரின் வாழ்வுக்கு அர்த்தம் தர பணி செய்வோம்.

●நயீன் ஊர் கைம்பெண்ணின் துயர் போக்கிய காருண்ணிய இயேசு போல் வா ஓரங்கட்டப்பட்ட விதவைகள் வாழ்வு பெற உழைத்து நிற்போம்.

●பெத்தானியாவில் உயிர் நண்பன் மறைவு கண்டு குமுறி அழுத இயேசு போல்
வா போலித்தனம், கள்ளத்தனம் இல்லா நட்புக்காய் ஏங்குவோரின் உண்மை நண்பராவோம்.

●தம் பணியின் நிறைவாய் கல்வாரி சிகரத்தில் உயிர் நீத்த இயேசு போல்
வா நாமும் இறையாட்சி பண்பான அன்பு, பாசம், பரிவாக வாழ்ந்து அதற்காய் உயிர் துறப்போம்.

●பணி வாழ்வில் எதிர்கொண்ட சவால்களையும் கொடூரங்களையும் தாண்டி உயிர்பெற்ற இயேசுபோல்
வா வாழ்வில் அவர் பண்புகளை வாழ்வாக்கி பிறர் வாழ்வில் ஒளியேற்றி உயிர்ப்பின் சாட்சிகளாவோம்!

- செல்வி த. மேரி பற்றீசியா -

ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது.

# மனித மாண்பு தரும் வாழ்வின் பாடங்கள்

**முன்னுரை...**

மனித மாண்பு மிகவும் ஒழுக்கவியல் கருத்துக்களோடு தொடர்புடையதாக காணப்படுகின்றது. மனித உரிமை பற்றி பேசுகின்ற போதும் கூட மனித மாண்பு தென்படுகின்றது. இதனது வரைவிலக்கணத்தோடு இது தனித்து நிற்பதால் இதனது அர்த்தம் தெளிவுபடுகின்றது என்பது அர்த்தமல்ல. மாண்போடு வாழ்வதும் மாண்பைக் கொடுப்பதும் உரிமை. அது செயலாக உருவாகவேண்டின் எமது சிந்தனையில் செல்வாக்கு செலுத்தவேண்டும். மனித மாண்பு என்கின்ற கருத்தியல் தெளிவற்ற சமூக சிந்தனைகளோடு விளக்கமற்ற முறையிலே அதன் தன்மை இழந்து நிற்பது இக்காலத்தில் தெளிவாகின்றது. இக்கருத்தியல் சார்பான கட்டுரைகள் இடம்பெற்று மனிதனின் உண்மையான மாண்பை மெய்ப்பிக்கின்றது.

**வரலாற்றுப் பார்வையில்...**

மனித மாண்பைப் பற்றி சிந்திக்கின்ற போது கடந்தகாலங்கள் மற்றும் அதன் வரலாற்று பதிவுகள் எமக்கு ஒரு புதிய விளக்கத்தை தருகின்றது. மனித மாண்பு மிகவும் மதிக்கத்தக்கது அது மிகவுமாய் பேணப்படவேண்டும் என்கின்ற எண்ணக்கரு இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு பின்னரே உணரப்பட்டது. இந்த யுத்த வடுக்கள் தந்த எச்சங்கள் பல்லாயிரக்கணக்கான மக்களின் நம்பிக்கையை காவுகொண்டது. இது வரலாற்று உண்மை. மாண்பு என்கின்ற சொல் சமய கருத்துக்களை தங்கிச் செல்வதாக காணப்படினும், கிறிஸ்தவ விவிலிய எழுத்துக்களிலே இச்சொல் மிக அரிதாகவே காணப்படுகின்றது. கிரேக்க வார்த்தையான *Geuvotrs (semnotes)* ஆங்கிலத்திலே *'Dignity'* அதாவது "மாண்பு" என்கின்ற அர்த்தத்தை கொடுக்கின்றது. ஆயினும் *Ažiorpe neta (Aksioprepeia)* என்கின்ற வார்த்தை இன்னும் மிக நெருங்கிய அர்த்தத்தை தருவதாக அமைகின்றது. புனித தோமஸ் அக்குவினஸ் தனது *Summa Theologiae* என்கின்ற நூலிலே மாண்பு என்கின்ற வார்த்தையை இலத்தின் மொழியிலே *digintas* என்று பயன்படுத்துவதையும் இவ்வார்த்தையானது 185 தடவைகள் இடம்பெறுவதையும் காணலாம். இந்த வார்த்தை அதனது தனித்துவத்தை அடிப்படையிலே தெரிவிப்பதாக அமைகின்றது. உதாரணமாக, தாவரங்கள் கற்களை விட பெறுமதியானவை. அதனது மாண்பு இரண்டு விடயங்களை சமாந்தரமாக வைத்து பார்க்கின்றபோது அதன் பெறுமதி தெளிவாகின்றது. கிரேக்க தத்துவயியலாளர் அரிஸ்டோட்டில் *Vemnotes* என்கின்ற வார்த்தையை தனது ஒழுக்கவியல் சார் நூலிலே குறிப்பிடுகின்றார். மாண்பு எனும் வார்த்தைக்குரிய இலத்தின் வார்த்தையை "தகுதி" *(Worthiness)* என்கின்ற வார்த்தைக்குள் கொண்டுவரமுடியும் என்று ஸ்டோய்க் *(Stoics)* தத்துவயியலாளர்களான, சிசேரோ மற்றும் செனேக்கா *(Cicero and Seneca)* கூறுகின்றனர். இம்மானுவேல் கான்ற் இந்த வார்த்தையை மனித சுதந்திரத்தோடு தொடர்புபடுத்துகின்றார். இது இயற்கையாகவே மனித சாயலோடு தொடர்புபட்டது என்றும், மனிதம் என்பதே மாண்புதான் என்று கூறுவதும் மனித மாண்புக்குரிய அழகான வரைவிலக்கணமாக அமைகின்றது. ஆகவே, மாண்பின்றி மனிதன் இருக்கமுடியாது. அவன் கருவாகிய கணமிருந்தே அவனது மாண்பு பொருள்படுகின்றது. இது இயற்கையானதே *(Intrinsic dignity)*. அவனது சிந்தனை, அவனது செயல், அவனது வாழ்வின் நிலைகள் அனைத்திலும் அவனுடைய சுதந்திரம் செயற்படுகின்றது. இதனால் அவனது மாண்பு பெறுமதியாகின்றது. அவனிடம் காணப்படுகின்ற திறமைகள் அவனது ஆற்றல்கள் எல்லாமே அவனது மாண்பை இன்னும் அதிகம் சம்பாதிக்க வழிவகுக்கின்றது *(Attributed dignity)*.

**தொடரும்...**

S. ஜேம்ஸ் சுரேந்திரராஜா. *OMI*
பிரான்ஸ்



முறையான பலிகளைச் செலுத்துங்கள் ஆண்டவரை நம்புங்கள்.

# ஆதித்திருச்சபையில் கற்றுக்கொள்ளும் கிறிஸ்தவம் – தொடர் கட்டுரை –

## உரோமையர் 7:1–25

இறந்து உயிருடன் எழுப்பப்பட்ட கிறிஸ்துவோடு நாம் இணைக்கப் பட்டுள்ளோம்.

அக்காலத்தில் வழங்கப்பட்ட திருச்சட்டத்தை மீறுவது பாவம் என கருதப்பட்டது. உண்மைதான். காரணம் **“பாவம்”** என்றால் என்னவென்று தெரியாது. **“கடவுள் அளித்த கட்டளையை மீறுவது பாவம். அது கடவுளை கோபப்படுத்தும். அதனால் அவர் நம்மை தண்டிப்பார்”**. இது மாத்திரமே அவர்கள் அறிந்திருந்தார்களே அன்றி அவரது மாறாத அன்பினையும் அவ் அன்பினை நாம் செய்யும் தவறுகள் அனைத்தும் தூர விலகச்செய்யும் என்பதனையும் அவர்கள் உணரவில்லை.

திருச்சட்டத்தை கேட்டார்கள். பார்த்தார்கள். மனித தண்டனைக்கு பயந்தார்களே அன்றி இறைவனின் அன்பை உணரவில்லை. கண்ணால் காணும் மனிதனை அன்பு செய்ய முடியாது கண்ணுக்கு புலப்படாத இறைவனை அன்பு செய்யமுடியாது. அதனால் எமக்குள்ளே வாசமாய் இருக்கும் தூய ஆவி எவ்வளவாய் துக்கப்படுகிறார் என்பதை நாம் உணர வேண்டும்.

எமது பாவங்கள், சாபங்கள் நோய்கள் அனைத்தையும் தம் கொடூரமான சிலுவை மரணத்தின் வழியாக புதைத்து மீண்டும் நாம் பாவத்தில் மரிக்கக்கூடாது என்பதற்காக மீட்பராக இரட்சகராக உயிரோடு எழுப்பப்பட்டார்.

மீண்டும் அவரது மாட்சிமை இணைந்திட வேண்டி நம்மை தம்மோடு



இணைத்துகொண்டார். ஆயினும் பாவமும், சாபமும், நோய்களும் நம்மிடையே இன்னும் நடமாடிக்கொண்டே இருக்கிறது. அதை பற்றிப்பிடிப்பதும் தூர விலக்குவதற்குமான அதிகாரமும் கிறிஸ்து வழியாக நாம் பெற்றிருக்கின்றோம்.

அதனால் சட்டத்திற்கும், கட்டளைகளுக்கும் பயப்படாது இறைவன் நமக்களித்துள்ள நற்செய்தியின் வழியாக எம் வாழ்வை பயணிப்போம்.

**தொடரும்.**

**– திருமதி. கோமஸ் –**

---

## நற்செய்திப் பெருவிழா - 2024

கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர்
**அதி.வண.மெல்கம் கர்தினல் ரஞ்ஜித் ஆண்டகை**
தலைமையில்
**துணை ஆயர் மேதகு. என்டன் ரஞ்ஜித் ஆண்டகை**
வழிகாட்டலில்

### திருவிழிப்பு ஆராதனை

இடம்:
புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி சதுக்கம்
St. Benedict's College Quadrangle
Kotahena, Colombo 13.
நாள்: 13.07.2024
ஆரம்பம் இரவு 8 மணிமுதல் அதிகாலை 5 மணிவரை

வழிநடத்துபவர் :
**அருட்பணி. வர்கீஸ்** V.C.

### ஆயத்த வழிப்பாடுகள்
**(தினமும் மாலை 6.00 - 8.30மணிவரை)**

- ✦ **ஜுலை 8 :** புனித வியாகுலமாதா ஆலயம், புதுச் செட்டித் தெரு
- ✦ **ஜுலை 9 :** புனித அந்தோனியார் ஆலயம், தெமட்டகொடை
- ✦ **ஜுலை 10:** நவகம்புர கிரான்பாஸ், புனித அந்தோனியார் சிற்றாலயம்
- ✦ **ஜுலை 11 :** வேளாங்கண்ணி ஆலயம், செக்கடித்தெரு
- ✦ **ஜுலை 12 :** புனித அன்னம்மாள் ஆலயம், செக்கடித் தெரு

**மாணவர் மாணவியர்க்கான விசேட தியானமானது:**

**ஜுலை 10 புதன்கிழமை அன்று காலை 9.00 –12.00 மணிவரை செக்கடித்தெரு, அன்னை வேளாங்கன்னி ஆலயத்தில் நடைபெறும்.**

ஏற்பாடு :
**கொழும்பு புனித ஜோசப்வாஸ் மன்றம்**

கடவுளே என் கேடயம் நேரிய உளத்தோரை அவர் விடுவிப்பார்.

# வேதாகம வினாடி வினா

**( வேதாகமப் பகுதி : தொடக்கநூல் 1 முதல் 20ம் அதிகாரம் வரை காலத்தை ஒட்டிய வினா விடைகள் )**



1. கடவுள் ஐந்தாம் நாளில் எவற்றை உருவாக்கினார்?

a).விண்மீன்கள் b).பறவைகள் c).ஊர்வன

2. கணவன் தன் தாய் தந்தையைவிட்டு மனைவியுடன் ஒன்றித்திருப்பான் . ஏன்?

a).இருவரும் ஒரே உடலாய் இருப்பதால் b).சதையின் சதையாய் ஆனதால் c).விலா எலும்பில் இருந்து எடுக்கப்பட்டதால்

3. நீ ஏன் சினமுற்றிருக்கிறாய்?இது யாருடைய கூற்று?

a).காயீன் b).ஆபேல் c).ஆண்டவர்

4. ஆதாம் எத்தனை வருஷம் வாழ்ந்தான்?

a).930 b).912 c).950

5. மண்ணுலகில் மனிதரை உருவாக்கியதற்காக ஆண்டவர் ஏன் மனம் வருந்தினார்?

a).மனித இதயத்தின் சிந்தனை முழுதும் தீமையே b).கடவுளுக்கு கீழ்படியாததால் c).ஆண்டவரை மறந்ததால்

6. நோவாவின் காலத்தில் எத்தனை நாள் மண்ணுலகில் வெள்ளம் பாய்ந்து பெருகிற்று?

a).40 நாள் b).150 நாள் c).15 நாள்

7. முதல் உடன்படிக்கையின் அடையாளமாக ஆண்டவர் எதைக் கொடுத்தார்?

a).விருத்தசேதனம் b).மேகம் c).வானவில்

8. ஆண்டவரே! எனக்கு என்ன தருவீர்? என ஆபிராம் ஏங்கியது எதற்காக?

a).குழந்தைக்காக b).ஆசீருக்காக c).உரிமைக்காக

9. தந்தை இறப்பதற்கு முன்னே இறந்த மகன் யார்?

a).தெராகு b).நாகோர் c).ஆரான்

10. நீ என் சகோதரி எனச்சொல்லிவிடு, என்ற வரியை எங்கெங்கு வாசிக்கின்றோம்?

a).தொடக்கநூல் (ஆதியாகமம்) 12 மற்றும் 20ம் அதிகாரத்தில் b).தொடக்கநூல் (ஆதியாகமம்) 12 மற்றும் 18ம் அதிகாரத்தில்
c).தொடக்கநூல் (ஆதியாகமம்) 19 மற்றும் 20ம் அதிகாரத்தில்

11. உன்னத கடவுளின் அர்ச்சகராக இருந்தவர் பெயர் என்ன?

a).மெல்கிசேதேக்கு b).சோதோம் ராஜா c).சாலேம் ராஜா

12. என்னை காண்பவரை நானும் இங்கே கண்டேன் அல்லவா? இது யாருடைய கூற்று?

a).இஸ்மயேல் b).சாரா c).ஆகார்

✦குறிப்பு :- இப்போட்டிக்கான சரியான பதில்களை WhatsApp ஊடாக அனுப்பவும். அதிர்ஷ்டசாலிகளுக்கு எம் மன்றத்தின் சார்பாக சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படும்.

✦Whatsapp number - 0775595399,0767725745,0773291072



என் ஆற்றலாகிய ஆண்டவரே! உம்மிடம் நான் அன்புகூர்கின்றேன்.

# கனம் பண்ணுதலின் முக்கியத்துவம்

இன்றைய 21 ஆம் நூற்றாண்டின் அதீத வளர்ச்சியில் குடும்பங்களுக்கு இடையிலான ஒற்றுமை மற்றும் விருந்தோம்பும் பண்பு என்பன நாளாந்தம் அருகி வருகின்றது. மேலைத்தேய கலாச்சாரத்தின் அதீத தாக்கமும் இதற்கான காரணியாக அமையப்பெறுகின்றது. குடும்பத்தில் பிணைப்பு அற்றுப் போவதால் கனம் பண்ணுதல் எனும் உயரிய விழுமியமும் மக்கள் மத்தியில் குறைந்தே செல்கின்றது. கணவன் மனைவியை கனம் பண்ணுதல், மனைவி கணவனை கனம் பண்ணுதல், பெற்றோரை, ஆசிரியர்களை, முதியவர்களை பிள்ளைகள் கனம் பண்ணுதல் என்பது கத்தோலிக்கத்தின் உயரிய மற்றும் அடிப்படையான பண்பாகும். மனுக்குமாரனாக இவ்வுலகில் அவதரித்த யேசு கிறீஸ்து தனக்கான வேளை வரும் வரை தனது பெற்றோர்களுக்கு பணிந்து ஞானத்திலும், பண்பிலும் விருத்தியடைந்ததாகவே வேதாகமம் சொல்கின்றது.



**(எல்லோரையும் கனம் பண்ணுங்கள், சகோதரரிடத்தில் அன்பு கூருங்கள். தேவனுக்குப் பயந்திருங்கள் ராஜாவைக் கனம் பண்ணுங்கள்)** என 1 பேதுரு 2:17 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

கனம் பண்ணுதல் எனும் சீரிய பண்பில் மாற்றம் ஏற்படும் போது அது குடும்பத்தின் கட்டமைப்பில் பாரிய தாக்கத்தை உண்டுபண்ணும். கணவன் மனைவிக்கு இடையில் ஒருவருக்கு ஒருவர் மதிப்பளிக்கும் பண்பு குறையும் போது ஒற்றுமை குறையும். மதிப்பளிக்காத தன்மை காரணமாக வாய் வார்த்தைகளில் பிறழ்வுகள் ஏற்படும்.மரியாதை குறைவான வார்த்தைகளைப் பிரயோகிப்பதன் காரணமாக ஏற்படும் பாதிப்பு குடும்பத்திற்கு இடையில் நீண்ட பிரிவை ஏற்படுத்தவும் தவறுவதில்லை.

பெற்றோர்களுக்கு இடையில் ஏற்படும் இந்த விரிசல் பிள்ளைகளையும் பாதிக்கத் தவறுவதில்லை. பெற்றோர் ஒருவரையொருவர் கனம் பண்ணாத பண்பினை பார்த்து வளரும் பிள்ளைகளும் அதற்குள் தம்மை உள்வாங்கிக் கொள்கின்றார்கள்.

தவறான வார்த்தைப் பிரயோகங்களைக் கையாள்வது. மூத்தவர்களுக்குக் கீழ்படியாமல் நடப்பது என நெறி தவறிச் செல்லும் நிலைக்குள்ளாகின்றார்கள். இது அவர்களின் பாடசாலை வாழ்க்கையைப் பாதிப்பதால் கல்வி நடவடிக்கைகளிலும் பாரிய தாக்கத்தை செலுத்துகின்றது.

இறைபக்தி, அன்பு, பணிவு, இன் சொல் உரைத்தல், உதவி செய்தல், ஒழுக்கம், ஜீவ காருண்யம், விட்டுக்கொடுத்தல், தலைமைத்துவம் என அனைத்து கத்தோலிக்கத்தின் உயரிய விழுமியங்களிலும் மாறாத தாக்கத்தை செலுத்தும் கனம் பண்ணுதல் எனும் பண்பை எம் வாழ்வில் கொண்டு இறைவனுக்கு உகந்த பிள்ளைகளாக வாழ்வோமாக.

- ஜூடின் சிந்துஜன், (லண்டன்) -

# பைபிள் ஹீரோக்கள்

தொடர்ச்சி.....

17

## - கிதியோன் -



சிறுவர்களே! உங்களுக்காக

ஆக்கம் : இவஞ்ஜலிஸ்டா வினோலிசன்

# சிறுவர் பக்கம்

***பைபிள் ஹீரோக்கள் - கிதியோன்***

இஸ்ராயேலர் மீண்டும் ஆண்டவருக்கு எதிராக பாவம் செய்த போது ஆண்டவர் அவர்களை மிதியானியரிடம் ஒப்படைத்தார். அவர்கள் இஸ்ராயேலரின் விளைச்சலை அழித்து மிகவும் கொடுமையாய் நடத்தினர். எனவே இஸ்ராயேலர் கடவுளை நோக்கி கூக்குரலிட்டனர்.



அப்போது ஆண்டவரின் தூதர் கிதியோனுக்கு தோன்றி, ‘இஸ்ராயேலரை மிதியானியர் கையிலிருந்து மீட்பாய்’ என்ற போது, கிதியோன் தான் வலிமை அற்றவன் என்று கூறி மறுத்தார். தூதர், ‘ஆண்டவர் உம்மோடு இருப்பார்’ என்று உறுதியளித்தார்.

தூதர் கூறியவாறே பாகாலுக்குரிய பலி பீடத்தை தகர்த்து, ஆண்டவருக்கு பலி பீடம் கட்டி, அதில் காளை ஒன்றை பலியிட்டார்.





பாகாலின் பலிபீடம் தகர்க்கப்பட்டதால் மிதியானியர், அமலேக்கியர் இஸ்ராயேலுக்கு எதிராக பாளையம் இறங்கிய போது, ஆண்டவரின்ஆவி கிதியோனை ஆட்கொள்ள, அவர் எக்காளம் ஊதி, மக்களை தம்மோடு இணைந்து கொள்ள அழைப்பு விடுத்தார்.

அத்தோடு கிதியோன், ‘தன் வழியாக ஆண்டவர் இஸ்ராயேலரை மீட்பர்’ எனின் அதன் அடையாளமாக போர் அடிக்கும் களத்தில் வைக்கப்பட்டுள்ள கம்பளியின் மேல் மட்டும் பனி இறங்கி தரை காய்ந்து இருப்பின் தாம் அதை நம்புவதாக கூற, அது அவ்வாறே நிகழ்ந்தது. அவர் கம்பளியை முறுக்கி பிழிய பனி நீர் கிண்ணம் முழுவதையும் நிரப்பியது.






போருக்கு தயாராகிய நிலையில் நாக்கால் நீரை நக்கி குடித்த, முந்நூறு பேரை கிதியோனோடு சேர்ந்து போரிட ஆண்டவர் தேர்ந்தெடுத்தார்.



300 பேரை மூன்று பிரிவாக பிரித்து கையில் எக்காளங்களையும் காலிப்பானைகளையும், நெருப்புப் பந்தங்களையும் கொடுத்து அனுப்பினார்.

எல்லையை அடைந்த பின்னர் பானையை உடைத்தனர். வலக்கையில் ஊத எக்காளமும் இடக்கையில் நெருப்பு பந்தமும் ஏந்தியவாறு பாளையத்தை சுற்றி நின்றனர்.





பிறகு அவர்களை துரத்திச் சென்றுவெட்டி வீழ்த்தினர். ஆண்டவர் அவர்களோடு இருந்தார்.



இவ்வாறு கிதியோன் ஆண்டவரின் ஆற்றலால் மிதியானியரை முற்றும் அழித்தார். அவரது காலத்தில் 40 ஆண்டுகளாக அமைதி நிலவியது.



நான் உம்மீது நம்பிக்கை வைத்துள்ளேன் “நீரே என் கடவுள்”

# குறுக்கெழுத்துப்போட்டி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 ■ | 6 |
| 7 | 8 ■ | 9 | 10 ■ | 11 | 12 |
| 13 | 14 ■ | 15 | 16 ■ | 17 | 18 |
| 19 ■ | 20 | 21 | 22 | 23 | 24 ■ |
| 25 | 26 | 27 ■ | 28 ■ | 29 ■ | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 ■ | 36 |

**மேலிருந்து கீழ்**

1 : நான்கு நற்செய்தியாளர்களில் ஒருவர்.

3 : தீச் சூழையின் நடுவே இறைவனை துதித்தவர்.

6 : "இறுதி" என்றும் கூறுவார். (தலைகீழ்)

11 : சத்தியத்தை இப்படியும் கூறலாம்.

20 : "இடது" என்பதன் எதிர்பதம்.

25 : ஏறிசெல்ல இது வேண்டும்.

30 : இந்த வழிபாடு இறைவனுக்கு அருவெறுப்பானது.

**இடமிருந்து வலம்**

1 - இயேசு திருமுழுக்கு பெற்ற நதி.

11 - "ஆடை" என்றும் கூறலாம்.

17 - இது இல்லாமல் பார்வை இல்லை. (இடம்மாறியுள்ளது)

20 - பெரும்பாடுள்ள பெண்ணின்விசுவாசமே இயேசுவிடமிருந்து இதனை வெளிப்படச் செய்தது.

25 - "சில" என்றும் சொல்லலாம்.

31 - இதயத்தின் ஒலியை இப்படியும் சொல்வர். (குழம்பியுள்ளது)

## குறுக்கெழுத்துப்போட்டி

**முன்னைய இதழின் விடைகள்**

**மேலிருந்து கீழ்**

1. இடி
2. யூதாஸ்
5. கல்
12. கன்னி
16. தண்ணீர்
24. கடல்
26. வாழை
29. பால்

**இடமிருந்து வலம்**

1. இஸ்ராயேல்
7. தாடி
11. கனி
14. யூதர்
19. நா
28. பாண்
31. அழைத்தல்

## "தாய்" வாசக நெஞ்சங்களே!

**தற்போது "தாய்" சஞ்சிகையை www.colombostjosephvazmandram.lk என்ற இணையதளத்தின் ஊடாகவும் நீங்கள் காணலாம் என்பதை அறியத் தருகின்றோம். இதன்மூலமாக வெளிநாட்டில் உள்ளவர்களும் இத் தாய் சஞ்சிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.**

(9ம் பக்க தொடர்ச்சி...)

தனது 15வது வயதில் இரத்த புற்று நோயால் பாதிக்கப்பட்டு, சிகிட்சை பலனின்றி 12-10-2006 அன்று இறைவனடி இணைந்தார்.

அவர் நோயினால் வேதனை படும்போது கூறிய வார்த்தைகள், "நான் யேசுவுக்காகவும், பாப்பரசருக்காகவும், திரு அவைக்காகவும் இந்த வேதனைகளைச் சகித்துக் கொண்டிருக்கிறேன்". இவருக்கு பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களால் 10-10-2020 அன்று முத்திப்பேறு பட்டம் அளிக்கப்பட்டது. இவரை நோக்கி மன்றாடிய பலர் நோயிலிருந்து விடுதலையடைந்தார்கள். நிறைய அற்புதங்கள் நடந்திருக்கின்றன.

எதிர்வரும் 20-10-2024 இல் பரிசுத்த பாப்பாண்டவர் பிரான்சிஸ் அவர்களால் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டு புனிதர் ஆகிறார் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயம். இவர் இணையத்தளத்தின் பாதுகாவலராக விளங்குவார். (PATRON OF INTERNET)

-ஜெயக்குமார் பெர்னாண்டோ-

# தூய இயூஜினின் தாகத்தில் தாய் மரி

எண்ணிலடங்கா மாற்றங்களைத் தன்னகத்தே ஒவ்வொரு நொடிப் பொழுதும் கொண்டிருக்கும் இவ்வுலகத்தில், காலங்களின் திண்டாட்டமான போக்கினால் எத்தனையோ விதமான எழுச்சி நிறை போராட்டங்களும், விசுவாச விருட்சங்களும் எம் திரு அவையில் முளைத்து பாரிய மாற்றத்தை இப்பிரபஞ்சத்திற்கு அள்ளிக் கொடுத்து இருக்கின்றது என்பதை எவராலும் அழித்துவிடவோ, மறைத்துவிடவோ முடியாது. இந்த வகையில்தான் 200 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு இளம் துளிரில் இறை அன்பின் தாகம் தீராத ஆசையோடு பல்வேறு விருப்புக்களையும், அவாக்களையும் ஏற்படுத்தியது. மனிதனின் சுயநலப் போக்குகளினாலும், திருப்தியடையா செயற்பாடுகளினாலும் இறை உறவை தொலைத்தவனாக வாழ்ந்த நேரத்தில்தான் இயூஜின் என்ற இளம் தளிர் விசுவாச தூணாக மாமரியின் அன்புப் பிள்ளையாக மேலோங்கி எழுந்தது. தான் கொண்ட இந்த விசுவாசத் தாகங்கள் எவ்வாறு நிறைவேறப் போகின்றது என்பது தூய இயூஜினின் வாழ்வில் பெரும் சவாலாக இருந்திருக்கும். அதற்காகத்தான் தாய் மரியே தனது தாகத்தின் விடை என்று, தன்னை மரியின் பாதையில் இட்டுச் சென்று இன்று திருச்சபையின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றுகின்றார்.

01. ஏன் புனித இயூஜின் தன் வாழ்வில் மரியன்னையை ஆதாயமாக எடுத்தும் கொண்டார்?

தூய இயூஜின் டி மெசனட் தனது அசையாத அர்ப்பணிப்புக் காரணமாக தன் முழு வாழ்வையுமே நற்செய்திப் பணிக்காக கொடுத்தவர். இறைமகன் இயேசுவின் வாழ்வை ஒரு முன் உதாரணமாக எடுத்து நல்ல கிறிஸ்தவ தூதுவனாக வாழ ஆசைப்பட்டவர். இவ்வாறு தனது வாழ்வை இறை உறவோடு தியானிக்கையில் அவர் கண்டு கொண்டது, அன்னை மாமரியே இறைமகனின் வாழ்விற்கும், முழு மனித குலத்திற்கும் விலை மதிக்க முடியா பொக்கிஷமாக அங்கம் வகிக்கின்றார். அன்னை மரியினுடைய உடனிருப்பு எவ்வாறு இறைமகனின் இரட்சகப் பயணத்தில் முக்கிய இடம் அளித்தது என்று திருவிவிலியத்திலே நாம் காண்கின்றோம்.
இதே போன்றுதான் புனித இயூஜினும் தான் செய்யப்போகிற விசுவாசப் பயணத்தில் தாய் மரியைப்போல் எவராலும் இறுதிவரை பயணிக்க முடியாது என்ற துணிச்சலான அன்பில் தாய் மரியே தன் தஞ்சம் என அன்னையை ஆதாயமாக்கிக் கொள்கின்றார். இன்னுமாக தனது கடினமான பாதையில் ஒரு ஆறுதலின் சக்தியாக தேவ தாய் தன்னை தேற்றுவார் என்ற அன்புப் பெருக்குடன் தன்னை, தன் வாழ்வை அன்னை மரியின் கரத்திலே ஒப்படைத்தார்.
தாய் மரியினுடைய வாழ்வை நாம் எங்கள் வாழ்விலே தியானிக்கின்ற பொழுது நாங்களும் ஏதோ ஒரு விதத்தில் அன்னைக்கு அர்ப்பணமானவர்கள் என்று உணர்கின்றோம். எம் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் வித்தியாசமாக செதுக்கப்பட்டாலும் இறுதியில் இறைமகன் எல்லோருக்கும் கொடுத்தது ஒரு தாய் தான். தன் இறுதி மூச்சில் கூட தனது தாய் மனித குலத்திற்கே தாயாவாள், எவரும் எதுவித பிரிவினையாலும் வாழக்கூடாது என்ற தூய எண்ணத்தோடு தன் அன்னையை கொடுத்திருக்கின்றார். (யோவான் 19 : 26 - 27)



2. தாய் மரி உறவில்
இளம் வயது இயூஜின் தன்னுடைய தேவ அழைத்தல் வாழ்வில் மிகவும் கடினமான பாதையூடாக சென்றவர். எத்தனையோ விதமான சவால்களுக்கும் குடும்பத்தின் பிரிவுக்கும் முகம் கொடுத்து தன் வாழ்க்கை கேள்விக்குறியாக இருப்பதை உணர்ந்தார். அதே சமயம் அவரது வாழ்வின் மறுபக்கத்தில் அன்னை மரியின் உடனிருப்பு இருக்கின்றது என்பதை அவர் மறந்துவிடவில்லை. அதே போன்று மரியன்னையின் பரிந்துரைப்பும் அவரது, தாயன்பும், அவரது வாழ்வை தினம் தினம் புடமிட்டு புனித இயூஜினின் வாழ்விற்கு வலுசேர்த்தது. தான் இறை அழைத்தலில் வேரூன்றி நிற்பதையும் மரியன்னை வறண்டு போகின்ற தன் வாழ்வினை செழிப்புற வைப்பதையும் தன் புனித வாழ்விலே அனுபவித்து வந்தார். இவ்வாறு நாளுக்கு நாள் இயூஜினின் தாகம் நம்பிக்கையிலும், ஆன்மீக நிறைவிலும் மனித இறை உறவிலும் ஊற்றெடுத்து வந்தது.

புனித இயூஜின் சிறுவயதில் இருந்தே ஏழை எளியவர் மீது அன்பும் கருணையும் கொண்டவர். அவரது வாழ்க்கையை நாம் அறிந்து கொள்வோமானால் அவர் காயப்பட்ட, நொறுக்கப்பட்ட, உடைக்கப்பட்ட மக்களுக்காக தன் நிலை துறந்து பல கேலி பேச்சுகளுக்கும், குடும்பத்தின் கண்டிப்பிற்கும் ஆளானவர். அவர் ஏன் இவ்வாறான மக்கள் மேல் சிறுவயதில் இருந்தே அக்கறை கொண்டிருந்தார்? இதற்கு காரணமும் அன்னை மரியின் எடுத்துக்காட்டு என்று சொல்வதில் எதுவித ஐயப்பாடும் இல்லை. தனது பாதுகாவலியாக இருந்த அன்னையின் உறவை அவர் மற்றவர் மேல் பார்க்கத் தொடங்கினார். ஏழை எளியவர் எல்லோரும் அன்னை மேல் அன்பாக இருப்பதும் அவர்களது வேண்டுதல்கள், ஆசைகள்,கனவுகள் எல்லாம் அன்னையின் மடியில் சமர்ப்பிக்கப்படுவதை அவர் உணர்ந்தார். இவ்வாறு உணர்கையில் தானும் அவர்களில் ஒருவராக இருந்து மரி அன்னையின் மற்றும் ஒரு புதல்வனாக மாற வேண்டும் என்று விருப்பம் கொண்டார். **தொடரும்....**

அருட்தந்தை. த.அனோஷன் பேட்ரம் (அ.ம.தி)

என் மொழிகளை ஏற்று, என் கட்டளைகளைச் சிந்தையில் இருத்திக்கொள்.




ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே,
இன்று அக்களிப்போம் அகமகிழ்வோம்

# பொன் விழா
# GOLDEN JUBILEE

**10/06/2024**

**திரு. மோசஸ்**
**திருமதி. மேரி ஜெஸ்மின்**

அன்பான தேவனே, எமக்கு உயிர், உரு, கல்வி கொடுத்து, எம்மை சமூகத்துக்கு உகந்த பிள்ளைகளாகவும், ஆன்மீகத்தோடும் வாழப் பழக்கி, குடும்ப வாழ்க்கைக்கு வித்திட்டு, இன்று பேரப்பிள்ளைகளையும் எமை போல் ஆளாக்கும் எம் பெற்றோர் பொன் விழா காணும் தருணத்தை தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.


அத்தோடு அவர்களுக்கு முழுமையான உடல், உள ஆரோக்கியத்தையும், நிறைவான மகிழ்ச்சியையும், நீண்ட ஆயுளையும் வரமாகத் தந்தருளும் பிதாவே. ஆமென் !

நன்றித் திருப்பலி 08-06-2024 அன்று காலை 9.00 மணிக்கு அருட்திரு. பிரான்சிஸ் CMF தலைமையில் நாயக்ககந்தை, புனித காணிக்கை மாதா தேவாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

**தந்தையே! அனைத்து குடும்பங்களையும் ஆசீர்வதியும்.**

அன்புடன் மக்கள், மருமக்கள்
M. டன்ஸ்டன் - சகாயமேரி
M. மாக்கஸ் - கிருத்திகா
G. கணேந்திரன் - விக்டோரியா
அனைவருடன் M. மணிராஜ்

**Grandsons**
ஆமோஸ், ஆரோன், யுவான், ஷெரோன், டியோன் மற்றும் டேபின்.
*Amos, Aron, Juan, Sheron, Deon & Durbin*




No. 23/1, Thimbirigasyaya Cross Road, Hendala, Wattala. Tel : 077 3051977

# Happy Anniversary



இறைவனின் சன்னிதியில் இருமனங்கள் இணைந்து
**இருபது** ஆண்டுகள் நிறைவுகண்ட
திரு திருமதி ***Mothilal Fernando Bridget De Croos***
தம்பதிகளுக்கும் அதேநன்நாளில் தனது அகவை 58இல் தடம்பதித்து
தனது பிறந்த நாளினை சிறப்புடன் கொண்டாடிய ***Bridget*** அவர்களுக்கும்
இறைவனின் பேரருளும் நிறைவான ஆசீரும் பாதுகாப்பும் வாழ்நாள் முழுதும்
தொடர்ந்திட வேண்டி வாழ்த்துகிறோம்.

LOVE

*அக்காமார், தம்பி, மைத்துனி,*
*மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள், மற்றும்* Fatima amma




"மறை வளர ஒன்றிணைவோம்"

இச்சஞ்சிகை அருட்பணி. ஆனந்த பெர்னாண்டோபுள்ளே அடிகளாரால் 30.06.2024 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.
*Printed by : JRCA Digital Graphic (Pvt) Ltd., No. 78, Brass Founder Street, Colombo - 13. :077 177 6646 : 075 777 6646*